2020 பிப்ரவரி 20]

9 LPG தகன மேடைகளாகவும், 6 மின்சார தகன மேடைகளாகவும் நவீன முறையில் மாற்றியமைக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கு முற்றிலும் இலவசமாகக் கொண்டுவரப்பட்டுள்ளன. மற்ற மயான பூமிகளில் பழைய முறைகளிலேயே தகனம் செய்யப்படுகிறது. அவையனைத்தும் படிப்படியாக மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, மண்டலம் 8, வார்டு 104–ல் உள்ள மயான மேடை குறித்துச் சொன்னார்கள். துறை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அவசியம் ஏற்படின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கண்டிப்பாக பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**60—**

## ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

***38734—திரு. சு. ராஜேந்திரன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, அரியலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், அரியலூரில் புதிய நீதிமன்றம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கான

*[2020 பிப்ரவரி 20*

*இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது; நிலமாற்றம் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் முடிவுற்றவுடன், கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. சு. ராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் வாழும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மறைந்த மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் மக்கள் நலப் பணிகளில், மக்களின் பேராதரவோடு மூன்று ஆண்டுகளை நிறைவு செய்து, நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளை இம்மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10—50*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த நாளை மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாகக் கொண்டாட அரசு முடிவு செய்து,* (மேசையைத் தட்டும் ஒலி) *மறைந்த அம்மா அவர்களின் நினைவைப் போற்றும்வண்ணம் ஆதரவற்ற பெண் குழந்தைகளின் வாழ்வுக்கான 5 புதிய திட்டங்களை அரசு செயல்படுத்த உள்ளது என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேற்றைய அறிவிப்பு, தமிழகத்தில் வாழும் தாய்மார்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. அதற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை இப்பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைக்கவிருப்பதற்கான அறிவிப்பின்மூலம் எனது அரியலூர் மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவக் கல்லூரி வழங்கியமைக்கு, எனது தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*2020 பிப்ரவரி 20*]

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரியலூர் தொகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்படும் என அறிவித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனை விரைந்து அமைத்திட மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற, அரியலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கான கோரிக்கையை வைத்தவுடன், அரியலூர் மாவட்டத்திலே இடம் தேர்வு செய்வதிலே இருந்த பிரச்சினையைக் கருத்தில் கொண்டு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான 3.85 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கு நிதித் துறையிடம் 7.88 கோடி ரூபாய்க்கு அனுமதி பெறப்பட்டிருக்கிறது. தற்போது நில மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த நில மாற்றம் செய்வதற்கான பணிகள் முடிந்தவுடனே கட்டடம் கட்டுவதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, உயர் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டு, உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரைக்கு ஒப்புதல் பெறப்பட்டவுடனே, கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்த ஆண்டிலேயே அதை நிறைவேற்றித் தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. சு. ராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொல்வதற்கிணங்க, அரியலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் விரைந்து அமைக்கப்படும் என்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது அரியலூர் தொகுதி மக்களின்*

சார்பாக நன்றியினை இந்த மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்து, நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய திருவெறும்பூர் தொகுதி 2010–ல் அன்றைக்கிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் தாலுகா அந்தஸ்தைப் பெற்றது. தாலுகா ஆனதற்குப் பிறகு, இன்றைக்கு அதற்கு தாலுகா மருத்துவமனைகளெல்லாம் வந்துவிட்டன. ஆனால், இன்னும் தாலுகா நீதிமன்றம் வராமலேயே இருந்து கொண்டிருக்கிறது. ஆக, இந்த ஆண்டாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கருத்துப்படி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், புதிதாக இப்போது பல்வேறு புதிய தாலுகாக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே இருக்கின்ற தாலுகாக்களிலே நீதிமன்றங்கள் இல்லாத தாலுகாக்களைக் கணக்கெடுத்து, சென்னை உயர் நீதிமன்றமும், தமிழக அரசும் இணைந்து எந்த தாலுகாக்களிலே நீதிமன்றங்கள் இல்லையோ, வழக்குகள் அதிகமாக நிலுவையில் இருக்கின்ற தாலுகாக்களின் எல்லைக்குட்பட்டு அந்த தாலுகாக்களைக் கணக்கெடுத்து, அங்கெல்லாம் புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று ஒரு கொள்கை முடிவெடுத்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பதவியேற்றவுடனே 51 நீதிமன்றங்களைத் திறப்பதற்கு அனுமதியளித்து, கடந்த ஆண்டு கூடுதலாக 5 தாலுகா நீதிமன்றங்கள் அமைவதற்கும் முடிவெடுத்து, இதுவரை 2 நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு அறிவித்த 5 தாலுகா நீதிமன்றங்களில் இப்போது 3 நீதிமன்றங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. மதுரவாயலிலும், பல்லாவரத்திலும் திறக்கப்பட வேண்டும். அவற்றையும் விரைவிலே திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆகவே,

*2020 பிப்ரவரி 20]*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, நீதிமன்றங்கள் இல்லாத வட்டங்களில், நீதிமன்றங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் திருவெறும்பூர் தாலுகா நீதிமன்றம் அமைப்பதற்கான கோரிக்கையினை, அங்கிருக்கின்ற வழக்குகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு, உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்த ஆண்டு கண்டிப்பாக அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

*முற்பகல் 10–55*

**திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத்தின் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களை வணங்குகிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம் மிகப் பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த, தொழிலாளர்கள் அதிகமாக இருக்கக்கூடிய மாவட்டமாகும். ஆகவே, அந்த மாவட்டத்திலே, கிருஷ்ணகிரியிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்குள் ஒரு தொழிலாளர் நீதிமன்றம் வேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டிருந்தேன். அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு, தீர்மானமாக நிறைவேற்றி அனுப்பச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். பின்னர், தீர்மானமும் நிறைவேற்றி, அது அந்த நீதிமன்றத்தின் மூலமாக உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அதைக் கருத்திற்கொண்டு, கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்குள் ஒரு தொழிலாளர் நீதிமன்றத்தை அமைப்பதற்கு முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை இங்கே வைத்தார்கள். கிருஷ்ணகிரி மாவட்டம் தொழிலாளர்கள் நிறைந்த ஒரு மாவட்டமாகும்.*

*ஆகவே, அவருடைய கோரிக்கையை ஏற்று அங்கே கண்டிப்பாக, ஒரு தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று தமிழக அரசின் சார்பாக உயர் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. இன்னும் அந்தப் பரிந்துரையின்மேல் எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை உயர் நீதிமன்றத்துடன் பேசி, கண்டிப்பாக, இந்த ஆண்டே தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

**திருமதி ம. கீதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் தாலுகாவில் ஒரு நீதிமன்றம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து சொல்ல வேண்டுமென்றால், பொதுவாக, ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்றால், அரசு மட்டும் நினைத்து, முடிவெடுக்க முடியாது. அதற்கு உயர் நீதிமன்றத்திடமிருந்து பரிந்துரை பெறப்பட வேண்டும். வழக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில்தான் நீதிமன்றங்கள் அமைப்பதற்கு உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்யும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அந்தப் பகுதியில் இருக்கின்ற நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, உயர் நீதிமன்றத்தோடு கலந்து பேசி, மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*